**Judicial Form No.53**
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

**CC No. 54/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | குப்புசாமி(PW2) | Profession | கிளை மேலாளர் |
| Father's Name | **முருகேசன்** | Calling | |
| Village | நல்லூர் | Religion | |
| District | **திருப்பூர் மாவட்டம்** | Age | **42** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of August 2026** by K.Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

**முதல் விசாரணை:–**

என்னிடம் காட்டப்படும் காசோலை எண். 625169 எங்கள் வங்கி காசோலை என்றால் சரிதான். வழக்கு காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் போதிய பணம் இல்லாத காரணத்தினால் திருப்பப்பட்டது. 09.10.2020 – 31.12.2020 தேதி வரை எத்தனை காசோலைகள் சமர்ப்பிக்கப்பட்டு திரும்பப்பட்டது என்றால் மேற்சொன்ன தேதிகளில் எந்த காசோலைகளும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படவுமில்லை திருப்பப்படவும் இல்லை. மேற்சொன்ன தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னரோ பின்னரோ ஏதாவது காசோலைகள் போதிய பணம் இல்லாமல் திருப்பப்பட்டதா என்றால் 01.09.2020 தேதியன்று ஒரு காசோலை திருப்பப்பட்டது. அதேபோல் 17.04.2021 தேதியன்று காசோலை திருப்பப்பட்டது. தற்போது காசோலைகள் சமர்ப்பிக்கப்படும் வங்கியில் ஆன்லைன் மூலமாக ( CTS) முறைப்படி அந்த வங்கியே காசோலையை பணத்தை கொடுக்கவும் காசோலையை பணம் இல்லாத காரணத்தினால் திருப்பவும் செய்யலாம்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு காசோலை புத்தகம் எதிரிக்கு எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால் தற்போது அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. வழக்கு காசோலை எத்தனை முறை வங்கிக்கு செலுத்தப்பட்டது என்றால் அது பற்றிய விபரம் எங்களுக்கு தெரியாது. வேறு வங்கியில் அவர் காசோலையை செலுத்தி இருந்தால் அதைப் பற்றிய விபரம் எங்களுக்கு தெரியாது. எதிரியின் வங்கி கணக்கு தற்போது முடிக்கப்பட்டுள்ளது. எந்த வருடத்தில் இருந்து எதிரியின் வங்கி கணக்கில் வரவு செலவு கணக்கு இல்லாமல் உள்ளது என்றால் 16.10.2021 தேதி முதல் வரவு செலவு இல்லாமல் உள்ளது.

**மறுவிசாரணை**: இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(Sd.) N.Keerthana

**நீதித்துறை நடுவர்,**
**அவிநாசி.**